பக்கங்கள்:-17

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | கார்த்திகை 13 | ஞாயிற்றுக்கிழமை | 30.11.2025 | அதிர்வு 122

## குருதிக்குத் தட்டுப்பாடு தானம் செய்யுங்கள்!




நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பேரிடர் சூழ் நிலையின் விளைவாக அரச வைத்தி

06



# பேரிடரால் சாவு 159 ஆக உயர்வு

## 203 பேர் காணாமல் போனார்கள் எட்டரை லட்சம் பேருக்குப் பாதிப்பு

**நாட்டில் வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தங்களால் கடந்த 16 ஆம்திகதி முதல் நேற்று இரவு 8 மணிவரை மொத்தம் 159 பேர் உயிரிழந்துள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.**

**மேலும் 203 பேர் காணாமல் போயுள்ளனர் என அந்த நிலையத்தினால் நேற்றிரவு 8 மணியளவில் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.**


06

## வடக்கு - கிழக்கில் வானிலை இன்று வழமைக்குத் திரும்பும்

நேற்று (சனிக்கிழமை) இரவுடன் வடக்கு – கிழக்கில் வானிலை நிலைமை சீரடைந்து விடும் என்றும் மக்கள் இனி அதிகம் அச்சமடையத் தேவையில்லை என்றும் காலநிலை அவதானிப்பு நிபுணரும் யாழ். பல்கலைக்கழக புவியியற் துறை தலைவருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

“டிடத்வா புயலின் உள்வளையத்தின் பின்பகுதி கடலினுள் சென்று

06






‘குருவி இருக்கப் பனம் பழம் விழுந்த மாதிரி’ என்பார்கள். அதன் அர்த்தம் என்ன என்பது எங்களுக்குப் புரியும்.

அதைக் குறிப்பிட்டு, அப்பால் ஒரு விடயத்துக்குச் செல்ல விரும்புகிறேன்.

பேரிடர் ஏற்பட்டுள்ள சமயத்தில் அவசரகாலச் சட்டம் அறிவிக்கப்பட வேண்டும், அதற்கு ஜனாதிபதி பின்னடிக்கின்றார், ஆனால் அந்தச் சட்டம் வருவது அவசியம் என்ற தொனியில் நேற்று முன்தினம் இரவு என் பத்தியை வரைந்திருந்தேன். அது நேற்றுக் காலை முரசில் பிரசுரமாகி இருந்தது. அது வாசகர்களுக்கு நினைவிருக்கும்.

அந்தப் பத்திரிகை நேற்று விடிகாலை வெளியான கையோடு, அவசரகாலச் சட்டத்தை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா பிரகடனப்படுத்தியிருக்கின்றார் என்ற செய்தியும் கொழும்பில் வெளியானது.

என் பத்தியில் அப்படி நான் கோரிக்கை விடுத்தபடியால்தான் அவர் அவசர அவசரகாலச் சட்டத்தை அறிவித்தார் என்று நான்

06



# குருநாகலில் 3 இடங்களில் மண்சரிவு 9 பேர் பலி; 24 பேரைக் காணவில்லை

குருநாகல் மாவட்டத்தில் மூன்று இடங்களில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக இதுவரை 9 பேர் உயிரிழந்துள்ளனர் என மாவட்ட செயலாளர் சந்தன திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த மண்சரிவுகளில் சிக்கி 24 பேர் காணாமல் போயுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்துஅவர்மேலும்தெரிவிக்கையில் –

குருநாகல் இதுல்கொட மலையில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி 12 பேர் காணாமல் போயுள்ளனர். அவர்களில் 5 பேரின் உடல்களி மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன், இப்பாகமுவ மற்றும் அரகமங்கந்த பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் பல வீடுகள் புதையுண்டுள்ளன. 8 பேர் காணாமல் போயுள்ளனர்.

ஓமரகொல்ல பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் 13 பேர் காணாமல் போயுள்ளனர். அவர்களில் நான்கு பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமென எச்சரிக்கை




நாட்டில் நிலவும் அதிதீவிர வானிலையால் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டை சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்று மணித்தியாலத்துக்கு 60 முதல் 70 கிலோ மீற்றர் வேகத்தில் வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சில சந்தர்ப்பங்களில் 80 முதல் 90 கிலோமீற்றர் வேகத்திலும் வீசக்கூடும்.

எனவே, மறு அறிவித்தல் வரை கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என கடல்சார் ஊழியர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

# சூறாவளி தீவை விட்டு நகர்ந்துள்ள நிலையில் மறைமுக விளைவுகள் இன்னும் இருக்கின்றன

## வானிலை ஆய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கூறுகின்றார்



சூறாவளி தீவை விட்டு நகர்ந்துள்ள நிலையில் அதன் நேரடி விளைவுகள் குறைந்துவிட்டாலும், மறைமுக விளைவுகள் இன்னும் இருப்பதாக வானிலை ஆய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க தெரிவித்தார்.

வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களின் சில பகுதிகளில் 100 மில்லி மீட்டருக்கும் அதிகமான மழை பெய்யும் சாத்தியம் இருப்பதாக அவர் எச்சரித்தார்.

மேலும், மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் 50 மில்லிமீட்டருக்கும் அதிகமான மழை பெய்யக்கூடும் என்றும், ஏனைய மாகாணங்களில் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும், கனமழை குறைந்திருந்தாலும், பேரிடர் நிலைமை இன்னும் முழுமையாகக் குறையவில்லை. எனவே, நிவாரண முகாம்களில் தங்கியுள்ளவர்கள் தற்போதைக்கு தங்கள் வீடுகளுக்குத் திரும்புவதைத் தவிர்க்குமாறு கருணாநாயக்க வலியுறுத்தினார்.

சூறாவளி காரணமாக மின் இணைப்புகளுக்கு ஏற்பட்ட சேதம் இன்னும் முழுமையாக சரி செய்யப்படவில்லை என்றும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சரியான புதுப்பிப்புகளை வழங்கும் வரை பொதுமக்கள் எச்சரிக்கையுடன் செயல்படுமாறும் அவர் மேலும் அறிவுறுத்தினார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிப்பவர்கள் கிணறுகளில் இருந்து தண்ணீரை முறையாக சுத்திகரிக்கும் வரை குடிப்பதைத் தவிர்க்குமாறும், அவ்வாறு செய்யத் தவறினால் பல்வேறு உடல்நலப் பிரச்சினைகள் ஏற்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

மேலும், இலங்கையின் மீதான மறைமுக தாக்கம் தொடர்ந்து வருவதால், தீவு மற்றும் அதைச் சுற்றியுள்ள கடல் பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 60-70 கி.மீ வரை அதிகரிக்கக்கூடும்.

எனவே, மீனவர்கள் மற்றும் கடற்படையினர் கடல்சார் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு அவர் அறிவுறுத்தினார். இந்த மறைமுக விளைவுகள் நவம்பர் இன்றைக்குள் தீவை விட்டு விலகிச் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும், அதன் பிறகு நாடு முழுவதும் சாதாரண வானிலை நிலவும் என்றும் அவர் கூறினார்.

# அனர்த்த பிரச்சினைகளை தெரிவிக்க 3 ‘வட்ஸ் அப்’ இலக்கங்கள் அறிமுகம்




நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கடுமையான அனர்த்த நிலைமை காரணமாக, அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்துள்ள பொதுமக்கள் தமது பிரச்சினைகள், தேவைகள் மற்றும் அவசரத் தகவல்களை இலகுவாக முன்வைக்கும் வகையில், மூன்று “வாட்ஸ் அப்”தொலைபேசிஇலக்கங்கள்அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி, அனர்த்த முகாமைத் துவ மையம் நிலையத்தினால் 070 411 71 17, 078 411 71 17, 077 411 71 17 ஆகிய வட்ஸ்அப் இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள், இந்த இலக்கங்கள் ஊடாகத் தமது அவசர நிலைமைகள் மற்றும் தேவைகள் குறித்த தகவல்களை அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் தொடர்புகொண்டு வழங்குமாறு கோரப்பட்டுள்ளனர்.



# செட்டிகுளம் - கந்தசாமி நகரில் வீட்டுக் கூரையில் இருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் கடற்படையினரால் மீட்பு

**(கி.வசந்தன்)**

வவுனியா செட்டிகுளம், கந்தசாமி நகர் பகுதியில் வெள்ளம் காரணமாக வீட்டின் கூரையில் தஞ்சம் புகுந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் கடற்படையினரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

வீட்டை சூழ்ந்த கடும் வெள்ளத்தின் காரணமாக அறுவரும் வீட்டின் கூரையில் இருந்த நிலையில் அவர்களை மீட்பதற்கான பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன், விமானப்படை உதவியுடன் அவர்களை மீட்பதற்கான முயற்சிகளை மேற்கொண்ட போதும் சீரற்ற காலநிலை காரணமாக ஹெலிக்கொப்டர் அங்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

அதன் பின்னர் கடற்படையினுடைய உதவியுடன் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ. திலகநாதன் நேரடியாக சென்று இரண்டு கட்டமாக படகு மூலம் ஒரே குடும்பத்தை சேர்ந்த ஆறு பேரையும் பாதுகாப்பாக மீட்டெடுத்து வந்தார்.



# மாந்தை மேற்கு சீது விநாயகர்புரத்தில் 36 பேரை மீட்க முடியாத நிலை நீடிப்பு

## ஜெகதீஸ்வரன் எம்.பியும் தகவல்

**(கி.வசந்தன்)**

மாந்தை மேற்கு விநாயகர் புரத்தில் 36 பேரை இன்னமும் மீட்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும், தொடர்ந்தும் மீட்பு முயற்சி இடம்பெறுவதாகவும் தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சீது விநாயகபுரம் மக்களை மீட்கும் முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன.




மன்னார் மாவட்டத்தினுடைய மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கூரலாய் கிராம அலுவலர் பிரிவின் சீது விநாயகர் புரம் பகுதியில் 36 பேர் வெள்ளத்தின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

கடந்த மூன்று தினங்களாக பாதிக்கப்பட்டவர்களை மீட்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் இதுவரை வெற்றி அளிக்கவில்லை.

மூன்று தடவைகள் கடற்படை படகுகள் ஊடாக கடற்படையினர் அவர்களை மீட்க முயற்சிகள் மேற்கொண்ட போதும் அது வெற்றி அளிக்கவில்லை ஆகவே அப்பகுதி மக்களை மீட்பதற்கான முயற்சிகளா தொடர்ந்து இடம்பெறுகின்றன அவர் தெரிவித்தார்.

# திருமலையில் 39 ஆயிரம் பேருக்குப் பாதிப்பு

(ஏ.எச்.ஹஸ்பர்)

சீரற்ற கால நிலை மற்றும் டித்வா புயல் காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் மொத்தமாக 12,319 குடும்பங்களைச் சேர்ந்த 39,030 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் 11 பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்கிய 200 கிராம சேவகர் பிரிவுகளில் இருந்து நேற்று மதியம் 12.00 மணி வரையான தகவலின் அடிப்படையில் வெளியிடப்பட்ட அறிக்கையின் பிரகாரம் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 424 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட 11,533 குடும்பங்களைச் சேர்ந்த 36,775 பேர் உறவினர்கள் மற்றும் சொந்த வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.14 பாதுகாப்பான தற்காலிக முகாம்களில் 786 குடும்பங்களைச் சேர்ந்த 2,255 பேர்கள் தங்க வைக்கப் பட்டுள்ளனர்.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவில் 360 குடும்பங்களைச் சேர்ந்த 1056 பேரும், தம்பலகாமதில் 369 குடும்பங்களைச் சேர்ந்த 1,149 பேரும், மொறவெவவில் 105 குடும்பங்களைச் சேர்ந்த 321 பேரும்,சேருவிலவில் 206 குடும்பங்களை சேர்ந்த 676 பேரும், வெருகல்க்ல் 398 குடும்பங்களைச் சேர்ந்த 1,272 பேரும்,மூதூரில் 4,024 குடும்பங்களைச் சேர்ந்த 11,754 பேரும், கிண்ணியாவில் 2,375 குடும்பங்களைச் சேர்ந்த 7,763 பேரும், கோமரங்கடவலவில் 226 குடும்பங்களை சேர்ந்த 730 பேரும் , பதவிசிறிபுரவில் 371 குடும்பங்களைச் சேர்ந்த 1,187 பேரும், குச்சவெளியில் 3,682 குடும்பங்களைச் சேர்ந்த 12,412 பேரும், கந்தளாயில் 203 குடும்பங்களைச் சேர்ந்த 710 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# பாதிப்புற்றோருக்கு உணவு விநியோகிக்கவும் ட்ரோன்களைக் களமிறக்கியது படைத் தரப்பு



பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு விநியோகிக்க ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன பாதுகாப்புப் படைத் தரப்பு தெரிவித்துள்ளது.

விமானப்படை விமானங்கள் சென்றடைய கடினமாக இருக்கும் - மக்கள் சிக்கித் தவிக்கும் இடங்களுக்கு - உணவு மற்றும் பிற வசதிகளை வழங்கவும் -

வெள்ளத்தில் சிக்கியுள்ள மக்களை அடையாளம் காணவும் -

ட்ரோன்கள் பயன்படுத்தப்படும் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று பேரிடர் பாதித்த பல பகுதிகளில் மக்களுக்கு உணவு விநியோகிக்க ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டன. காற்றும் புயலும் தணிந்துளமையால் ட்ரோன்களொ பயன்படுத்துவதில் நெருக்கடி இருக்காது என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

# மன்னாரில் 50க்கும் அதிகமானோர் கூரைகளிலும், மரங்களிலும் தஞ்சம்

## மீட்குமாறு அவசர கோரிக்கை

(ந.லோகதயாளன்)

மன்னார் மாவட்டத்தின் பல பகுதியில் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் தங்கள் இருப்பிடங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டு அதற்குள் மூழ்கிய நிலையில், மரங்களிலும் வீடுகளின் கூரைகளிலும் தஞ்சமடைந்தவாறு தங்களை மீட்குமாறு அவசர கோரிக்கை விடுத்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளில் பலர் வீடுகளில் அகப்பட்டு, போக்குவரத்துப் பாதைகளும் துண்டிக்கப்பட்டு வீடுகளும் வெள்ளத்தில் மூழ்கியமையால் உயிரைக் காப்பதற்காக வீடுகளின் கூரைகள் மற்றும் மரங்களில் தஞ்சம் அடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு மரங்கள் கூரைகளில் தஞ்சமடைந்திருப்போர் தம்மை மீட்குமாறு அவசர கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

மன்னாரின் சீதுவிநாயகபுரத்தில் 40 பேர் மரத்திலும், குஞ்சுக்குளத்தில் மூவர் தேக்க மரத்திலும் தஞ்சமடைந்துள்ளனர்.

அறுகம்குட்டு பிரதேசத்தில் 50 பேரும், மடுக்கரையில் 50 பேரும் என 143 பேர் இவ்வாறு அகப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களை மீடக விமானப்படை மற்றும் கடற்படையின் உதவி நாடப்பட்ட போதிலும், கால நிலை சீர்கேட்டினால் மீட்பு பணியில் நெருக்கடி நிலவுவதாக மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரலாபம் பண்ணினால், அது எவ்வளவு தூரம் அபத்தமானது என்பது வாசகர்களுக்கு புரியும்.

அதுபோன்ற ஓர் அபத்தத்தை தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பிரலாபித்திருப்பதை சுட்டிக்காட்டுவதே இன்றைய பத்தியின் பங்காக உள்ளது.

இலங்கை மீது பேரிடர் தாக்கம் இடம்பெற்றுக் கொண்டிருந்த போதே, பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு நிவாரண உதவிகளை விரைந்து அனுப்பும் தனது முடிவை நேற்று முன்தினம் அதிகாலையிலேயே இந்திய பிரதமர் மோடி அறிவித்து விட்டார். அன்று இரவும் அடுத்த நாள் அதிகாலையும் நிவாரணப் பொருள்களைத் தாங்கிய விமானங்கள் கொழும்புக்கு விரைந்தன. கப்பலிலும் ஒரு தொகுதி கொழும்புக்கு வருகின்றது.

ஆயினும், கப்பலில் வரும் நிவாரணப் பொருள்களை, நாட்டுக்குள் வெள்ளத்தினால் தரைவழிப் போக்குவரத்து பாதிப்புற்றிருக்கும் நிலைமை காரணமாக பல இடங்களுக்கும் எடுத்துச் சென்று விநியோகிப்பது உடனடி சாத்தியம் இல்லை என்பதால், வடக்கு, கிழக்குக்குரிய பொருள்களை கொழும்புக்கு அனுப்பாமல், வடக்கு – கிழக்குடன் தரைவழியில் ஊடாடக்கூடிய ஒரு பொது துறைமுகத்திற்கு கொண்டு வர இந்தியா தீர்மானித்தது. அதன்படி வடக்கு, கிழக்குக்கான பொருள்களை திருகோணமலைக்கு அனுப்பினால், அங்கிருந்து யாழ்ப்பாண மாவட்டம் உட்பட வடமாகாண பகுதிகளுக்கும் மட்டக்களப்பு, அம்பாறை போன்ற கிழக்கு மாகாணப் பிரதேசங்களுக்கும் தரை வழியாக அனுப்ப முடியும் எனக் கணக்கிட்டு, அந்த முடிவை கொழும்பு அரசுத் தரப்புடன் பேசி இந்தியா ஒழுங்குப்படுத்தியிருந்தது.

அதன்படி இந்திய நிவாரணப் பொருள்களைத் தாங்கிய கப்பல் இன்று திருகோணமலைக்கு வருகின்றது. அது பற்றிய விவரமான செய்தியை நேற்று மாலை முரசில் வெளியிட்டிருந்தோம்.

திருகோணமலைக்கு அந்தப் பொருள்கள் வருகின்றமையால், அங்கிருந்து அவற்றை தரை மார்க்கமாக வடக்கு, கிழக்கின் மற்றப் பகுதிகளுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளை கவனிப்பதற்கு இந்திய தூதரகத்தின் அதிகாரிகள் திருகோணமலைக்குச் செல்ல இருக்கிறார்கள் எனத் தெரிகிறது. தங்களின் அந்த நடவடிக்கைக்காக உள்ளூர் அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளும் நோக்கில் அவர்கள் திருகோணமலையின் தமிழரசு கட்சி எம்.பியான குகதாசனோடும் தொடர்பு கொண்டார்கள் எனத் தெரிகிறது.

அதற்கிடையில் நேற்று திருகோணமலைப் பிராந்தியத்தில் இருந்து இரண்டொரு செய்தியாளர்கள் அனுப்பிய செய்தியைப் பார்த்தபோது எனக்கு பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது.

“இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன் இலங்கைக்கான இந்திய உயர்தானிகரிடத்தில் விடுத்த கோரிக்கை அமைவாக நாளை (30) இந்தியாவில் இருந்து பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண பொருள்கள் அடங்கிய ஓர் உதவி கப்பல் திருகோணமலைக்கு வர உள்ளது” – என்று அந்தச் செய்தி அமைந்திருந்தது.

27,28,29 ஆம் திகதிகளில் பேரிடர் தாக்குகிறது. அதற்கானநிவாரணபொருள்கள் இந்தியாவில் கப்பலில் ஏற்றப்பட்டு 30 ஆம் திகதி திருகோணமலைக்கு வருகின்றது. இவ்வளவு விரைவில் குகதாசன் கேட்டுக்கொண்ட ஏற்பாட்டில் நடப்பதாக ஒரு பம்மாத்து அவிழ்த்து விடப்படுகின்றது.

அப்படி இல்லாத விடயங்களுக்கெல்லாம், அரசு தரப்பு எம்.பிக்களையும் தாண்டி, தமிழரசு எம்.பி. குகதாசன் உரிமை கோருவது வேடிக்கையிலும் வேடிக்கை.

இது குறித்து தூதரக வட்டாரங்களைத் தொடர்பு கொண்டு விசாரித்தேன்.

“குகதாசனின் கோரிக்கையின் பேரில் தான் கப்பலைத் திருகோணமலைக்கு அனுப்புகின்றீர்களாம்...?” – என்று விசாரித்த போது அவர்கள் ஒரு நையாண்டிச் சிரிப்புச் சிரித்தார்கள்.

“அவர் கோரிக்கை விடுத்தார் எனக் கூறப்படுகின்றது. எழுத்தில் அனுப்பி இருப்பாரே...?” – என்று விசாரித்தேன்.

‘இருக்கலாம். ஆனால் இன்னமும் அத்தகைய கோரிக்கை எமக்கு வந்து சேரவில்லை’ – என்று பதில் வந்தது.

திருகோணமலையில் புத்தர் சிலை முளைத்த போது தன் தொகுதிப் பக்கமே தலையே காட்டாமல் கொழும்பில் படுத்திருந்த எம்.பி., இப்போது பேரிடர் தாக்கிய போதும் கொழும்பில்தான் வாசம் செய்கின்றார். ஆனால் இவ்வளவு விரைவாக இந்தியமோடிஅரசைத்தூண்டி, திருகோணமலைக்கு நிவாரணப் பொருள்களை தனது முயற்சியில் – தனது கோரிக்கையில் – கொண்டு வந்தார் என்று அவர் செய்தியாளர்கள் மூலம் உரிமை கோரலாம் என்றால் –

நேற்று நான் அவசர காலச் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்ற பாணியில் வற்புறுத்தி எழுத, அது வெளியான கையோடு அவசர காலச் சட்டத்தை ஜனாதிபதி அறிவித்திருக்கின்றமையால், எனது கோரிக்கையின் பேரில்தான் அது வந்தது என்று நான் கூறுவதும் அபத்தம் இல்லை அல்லவா...?

## குருதிக்குத் தட்டுப்பாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யசாலைகளில் இரத்தப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

தினசரி இரத்தத் தேவைகளில் பெரும்பகுதி நடமாடும் இரத்த தான நடவடிக்கைகள் மூலமே சேகரிக்கப்பட்டு வந்தது. தற்போதைய வானிலை நிலைமைகள் இந்தத் திறனை சீர்குலைத்துள்ளன என தேசிய இரத்த மாற்று சேவையின் இயக்குநர் டாக்டர் லக்ஷ்மன் எதிரிசிங்கே கூறினார்.

“சராசரியாக, தேசிய இரத்த அமைப்பை பராமரிக்க ஒரு நாளைக்கு 1,400 முதல் 1,500 இரத்த அலகுகள் வரை தேவைப்படுகிறது. மேலும் அதில் சுமார் 85 சதவீதம் பொதுவாக நடமாடும் இரத்த சேகரிப்பு நடவடிக்கைகள் மூலம் பெறப்பட்டு வருகிறது,” என்று அவர் கூறினார்.

“சமீபத்திய நாள்களில் தேவையான அளவு இரத்தம் சேகரிக்கப்படவில்லை. இது தேசிய இரத்த இருப்புக்களின் கையிருப்பில் கவலைக்குரிய நிலைமையை ஏற்படுத்தியுள்ளது” என்றும் அவர் எச்சரித்தார்.

நாடு முழுவதும் உள்ள முக்கிய இரத்த மையங்களுக்குச் சென்று இரத்த தானம் செய்யுமாறு டாக்டர் எதிரிசிங்க பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

”நேற்று (வெள்ளியன்று) நாங்கள் 1,800 யூனிட்களை சேகரிப்போம் என்று எதிர்பார்த்தோம். ஆனால் சுமார் 231 யூனிட்களை மட்டுமே சேகரிக்க முடிந்தது” என்று அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம், அநுராதபுரம், குருநாகல், ராகம, நாரஹேன்பிட்ட, கம்புருகமுவ, கராபிட்டிய, ஹம்பாந்தோட்டை, மஹரகமவில் உள்ள அபேக்ஷா மருத்துவமனை மற்றும் கொழும்பு தேசிய மருத்துவமனை ஆகிய இடங்களில் உள்ள முக்கிய மையங்களில் இரத்த தானம் செய்யுமாறு அவர் குடிமக்களை வலியுறுத்தினார்.

இந்த மையங்கள் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரையிலும், நாரஹேன்பிட்டவில் உள்ள பிரதான மையம் காலை 8 மணி முதல் மாலை 6:30 மணி வரையிலும் திறந்திருக்கும்.

## வடக்கு - கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொண்டிருக்கின்றது. அதனால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னாரில் காற்று சற்று வேகமாக வீசுகின்றது. சற்று கனமழையும் கிடைத்து வருகின்றது.

“புயலின் ஆற்றல் மிக்க உள்வளையம் கடலுக்கு செல்வதன் விளைவே இந்த வேகமான காற்று வீசுகை மற்றும் சற்று கனமழை. அச்சப்பட எதுவுமில்லை.

“ஆனால், ஏற்கெனவே மண் நெகிழ்வான நிலையில் இருப்பதனால் மரங்கள் பாறிவிழக்கூடும். மின்கோபுரங்கள் சரிந்து மின் வடங்கள் அறுந்து விழக்கூடும்.

“ஆகவே இவை தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும். சனிக்கிழமை இரவுடன் இந்த வானிலை நிலைமையும் சீரடைந்து விடும்” என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## பேரிடரால் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த அனர்த்தங்களால் நாடு முழுவதும் 25 மாவட்டங்களைச் சேர்ந்த 234, 503 குடும்பங்களைச் சேர்ந்த 833, 985 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம், 34,198 குடும்பங்களைச் சேர்ந்த 122,822 பேர் 919 பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கண்டி மாவட்டத்தில் இதுவரை 52 பேர் உயிரிழந்துள்ளமையுடன், 105 பேர் காணாமல் போயுள்ளனர்

பதுளை மாவட்டத்தில் 52 பேர் உயிரிழந்துள்ளமையுடன், 42 பேர் காணாமல்போயுள்ளனர்.

மாத்தளை மாவட்டத்தில் 18 பேரும், கேகாலை மாவட்டத்தில் 9 பேரும் பலியாகியுள்ளனர். அந்தமாவட்டங்களில்முறையே 6 மற்றும் 24 பேர் காணாமல்போயுள்ளனர்.

# 1,775 "கெப்" வாங்க ஒதுக்கிய ரூ.1,250 கோடியை மக்களுக்கு நிவாரணம் வழங்கப் பயன்படுத்துங்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா இப்படி யோசனை

வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ரூ.12,500 மில்லியனை பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க பயன்படுத்துங்கள்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா தெரிவித்திருக்கின்றார்.

நமது நாடு பெரும் பேரனர்த்த சவால்களை எதிர்கொண்டு, பல துயர சம்பவங்கள் நிகழ்ந்து, நமது சக குடிமக்கள் தங்கள் உயிர்களையும், சொத்துக்களையும், வீடுகளையும் இழந்திருக்கும் இந் நேரத்தில், 1,775 புதிய கெப் வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கிய ரூ.12,500 மில்லியனை பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப் பயன்படுத்தி, பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை கட்டியெழுப்புவதற்கும், சேதமடைந்த நாட்டின் உள்கட்டமைப்பு வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும். மக்களின் இழந்த வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்கும், பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்கொள்ளும் சவாலான பிரச்சினைகளுக்கு பதில்களையும் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக புதிய கெப் வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கிய இந்தப் பணத்தைப் பயன்படுத்துமாறு அரசாங்கத்திற்கு யோசனை முன் வைக்கிறேன் என்றார் அவர்.



நாட்டைத் தாக்கிய "டித்வா" சூறாவளிப் புயலால் ஏற்பட்ட கடுமையான பேரழிவால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் காரணமாக பல மாவட்டங்களில் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இவ்வாறு பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் இருக்கும் மக்களின் சுக துக்கங்களை கேட்டறிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்றுக் கள விஜயங்களை மேற்கொண்டார். இதன்போது கடுவெல கொத்தலாவல கல்லூரி, சங்கபிட்டிக விகாரை, கடுவெல ஹேவாகம அபிநவ ராம விகாரை, கொரத்தோட்டை, நவகமுவ ஸ்ரீ அசோகராமய, போமிரிய கனிஷ்ட வித்திலாயம் உட்பட பல இடைத்தங்கல் முகாம்களுக்கு அவர் விஜயம் செய்தார்.

வரவு - செலவுத் திட்டத்தின் குழு நிலை விவாதம் நடந்து வரும் இச்சமயம், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மக்களின் நலனுக்காக புதிய கெப் வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கிய இந்தப் பணத்தைப் ஒதுக்கும் வகையில் வரவுசெலவுத் திட்டத்தில் மாற்றத்தைக் கொண்டுவருவதற்குத் தேவையான ஆதரவைப் பெற்றுத் தருவோம் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மேலும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களின் உயிரைப் பாதுகாத்து, வாழ்வாதாரங்களைக் கட்டியெழுப்ப, உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மேலதிக நிதியைப் பெறுவதற்கு அரசாங்கம் குறை நிரப்பு பிரேரணையொன்றை கொண்டு வரும் பட்சத்தில், அதற்கு நாம் எமது பூரண ஆதரவைத் தருவோம்.

இந்நேரத்தில் சர்வதேச ஆதரவைத் திரட்டும் மாநாடே தேவையாக காணப்படுகின்றது. எனவே இந்த மாநாட்டைக் கூட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு கூட்டும் பட்சத்தில் எதிர்க்கட்சியாக நாம் எமது கூடிய ஈடுபாட்டுடன் எமது பங்களிப்பைப் பெற்றுத் தந்து, நாட்டுக்குத் தேவையான நிதியைத் திரட்ட முழுமையான ஒத்துழைப்பை பெற்றுத் தருவோம்.

இனம், மதம், சாதி, வர்க்கம் மற்றும் கட்சி வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, சுயதொழில், மீன்பிடி மற்றும் பிற வாழ்வாதாரங்களில் ஈடுபட்டுள்ளவர்களின் வாழ்க்கையைப் பாதுகாக்க மக்கள் ஒன்றாய் கைகோர்த்து ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். - என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இங்கு மேலும் தெரிவித்தார்.

# மன்னார் கட்டுக்கரை குளத்தின் வான் பகுதி பாதிப்புறும் ஆபத்து

## பரப்புக்கடந்தான், அடம்பன் தாழ்வு மக்களை வெளியேறப் பணிப்பு



(மன்னார் நிருபர்)

மன்னார் கட்டுக்கரை குளத்தின் வான் நீர் வரத்து அதிகரித்து காணப்படுவதோடு வான்பகுதி பாதிப்படையும் ஆபத்து இருப்பதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அதனால் பரப்புக்கடந்தான், அடம்பன் தாழ்வுப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்கின்றமையோடு முன்னெச்சரிக்கையாக பாதுகாப்பான இடங்களை நோக்கி செல்லுமாறும் கோரப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தகவல் கிடைக் கப் பெற்றுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## அநுரவின் பொறுப்புணர்வு

தீக்குச்சைக் கொண்டு விளக்கும் ஏற்றலாம், வீட்டையும் எரிக்கலாம். அது தீக்குச்சை பயன்படுத்துபவரின் இலக்கிலும் நோக்கிலும் தங்கியுள்ளது.

அது போன்றதுதான் சட்டமும். சட்டத்தை ஆட்சியாளர்கள் நன்நோக்குக்கும் பயன்படுத்தலாம்; தீய செயல்களை ஆற்றவும் பிரயோகிக்கலாம்.

முன்னைய அரசுகளின் ஆட்சிக் காலத்தில் அவசர காலச் சட்டம் அவ்வாறுதான் தவறான முறையில் பல தடவைகள் - நீண்ட காலம் - பயன்படுத்தப்பட்டது என்பது தெரிந்த விடயம் தான். அவசர கால நிலைமைகளின் கீழ் கிடைத்த கட்டுமட்டற்ற அதிகாரங்களை வைத்துக் கொண்டு முன்னைய ஆட்சியாளர்கள் ஆடிய ஆட்டங்கள் அனைவருக்கும் தெரிந்தவைதான்.

அதனால் பாதிக்கப்பட்டவர்களில் முன்னைய ஜே.வி.பியினரும் அடங்குவார்கள். முன்னைய அரசுகள் அவசர காலச் சட்டத்தை தவறாகப் பயன்படுத்தியமையால் ஏற்பட்ட விபரீத அனுபவங்கள் தற்போதைய ஜனாதிபதி உட்பட முன்னைய ஜே.வி.பியினருக்குத் தாராளமாக உண்டு. அவசர காலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதையும், அது தவறாக பயன்படுத்தப்படுவதையும், மிக மோசமாக விமர்சித்தவர்களில் இன்றைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க முதன்மையானவர்.

அதனாலோ, என்னவோ இப்போது நாடு பேரிடரைச் சந்தித்திருக்கும் நிலையில் அதனை எதிர்கொள்வதற்காக அவசர காலச் சட்டத்தைக் கொண்டு வாருங்கள் என்று எதிர்க்கட்சியினர் வற்புறுத்திய போதும் கூட - பகிரங்கமாக வலியுறுத்திய போதிலும் கூட - அதனால் எழக்கூடிய விடயங்களுக்குத் தாங்களும் சேர்ந்து பொறுப்பேற்பார்கள் எனக் கூறிய பின்னரும் கூட - அவசர காலச் சட்டத்தை கொண்டு வர அவர் பின்னடித்தார்.

அவசர காலச் சட்டத்தைக் கொண்டு வந்தால்தான் பேரிடர் காலத்தில் மக்களுக்கான அவசர நிவாரணப் பணிகளை மாவட்ட மட்ட செயலக அதிகாரிகள் விரைந்து கையாள முடியும் என்று எதிர்க்கட்சியினர் விசேடமாகச் சுட்டிக் காட்டி இருந்தனர். பாதிக்கப்பட்டோருக்கு படுத்துறங்குவதற்குப் பாய் வாங்கிக் கொடுப்பதற்குக் கூட மாவட்ட செயலகம் பழைய கேள்விப் பத்திர நடைமுறையைக் கையாள்வதாயின் விடயம் ஒப்பேற மாட்டாது என்பதை சுட்டி காட்டிய போதும் கூட, அவசர காலச் சட்டத்தைக் கொண்டு வர ஜனாதிபதி பின்னடித்தார். அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தால் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் வருகை வீழ்ச்சியடைந்து நாட்டின் வருமானம் இழக்கப்படும் என்று ஒரு காரணம் அதற்குக் கூறப்பட்டது.

இப்போது, இரண்டு நாள்களின் பின்னர்தான் அதனை அவர் கொண்டு வந்திருக்கின்றார். அது கூட எதிர்க்கட்சிகளின் வற்புறுத்தலின் காரணமாக அல்ல.

வெள்ளப்பெருக்கு ஏற்படும் பல இடங்களில், உயிரிழப்புகளைத் தவிர்க்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மக்களை அவர்களது வழமையான வாழிடங்களில் இருந்து கட்டாயப்படுத்தியேனும் வெளியேற்ற வேண்டிய சூழ்நிலை அதிகாரிகளுக்கு ஏற்பட்ட போது, அதற்கான அதிகாரத்தை அவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காகவே வேறு வழியின்றி மிகுந்த பின்னடிப்பின் கீழ் அவசர கால கட்டத்தை ஜனாதிபதி பிரகடனப்படுத்தியிருக்கிறார்.

முன்னைய ஜனாதிபதிகளை போல விழுந்தடித்து அவசரகாலச்சட்டத்தைப் பிரகடனப்படுத்தி, அதன் கீழான அதீத அதிகாரங்களை தனது அரசு கையில் எடுப்பதை அவர் விரும்பவில்லை என்பதை தமது இந்த பின்னடிப்பு நடவடிக்கை மூலம் ஜனாதிபதி பிரதிபலித்திருக்கின்றார்.

எதிர்க்கட்சிகள் என்ன விமர்சனம் செய்தாலும், அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்துவதில் மிகுந்த நிதானத்தை கடைப்பிடித்த ஜனாதிபதியின் நிலைப்பாடு கவனிக்கத்தக்கதும் பொறுப்புணர்வு மிக்கதுமாகவுமே தோன்றுகின்றது. அதனை மறுப்பதற்கு இல்லை.





# தொடர் மழையால் ராமேஸ்வரத்தில் வீடுகளுக்குள் புகுந்த மழை வெள்ளம்!

## பொதுமக்கள் கடும் அவதி

டித்வா புயல் தாக்கம் காரணமாக ராமேஸ்வரத்தில் தொடர் கனமழையால் குடியிருப்புகளை சுற்றி மழை வெள்ளம் தேங்கியுள்ளதுடன், வீடுகளுக்குள் மழை வெள்ளம் தேங்கியதால் பொதுமக்கள் கடும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர்.

டித்வா புயல் காரணமாக ராமநாதபுரம் மாவட்டத்தில் ராமேஸ்வரம், மண்டபம், பாம்பன், தங்கச்சிமடம் மற்றும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், நேற்று முன்தினம் மதியம் தொடங்கிய மழை நேற்று மாலை வரையும் தொடர்ந்து பெய்து வருகிறது. ராமேஸ்வரம் சுற்றுவட்டார கடலோரப் பகுதிகளில் கனமழையும், அவ்வப்போது சாரல் மழையும் பெய்தது. பாம்பன் துறைமுகத்தில் 4 ஆம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் ராமேஸ்வரம், பாம்பன், மண்டபம், தங்கச்சிடம் பகுதிகளில் 7 சென்றி மீறருக்கு மேல் மழை பதிவாகியுள்ளது. தொடர் கனமழையால் ராமேஸ்வரம் அண்ணாநகர், காந்திநகர், திருவள்ளுவர் நகர், நடராஜபுரம், பாம்பன் சின்னப்பாலம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகளுக்குள் மழை வெள்ளம் புகுந்து தேங்கியுள்ளது.

வீடுகளுக்குள் மழை வெள்ளம் புகுந்ததால் வைத்திருந்த வீட்டு உபயோக பொருள்கள், கட்டில் பாத்திரம் தண்ணீரில் மிதக்கின்றது. தண்ணீரில் இருந்து பாதுகாக்க குழந்தைகளுடன் கட்டிலில் அமர்ந்து வாழ்க்கை நடத்துகின்றனர்.



பெரும்பாலான குடும்பங்கள் அங்குள்ள நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சில பகுதிகளில் மழை வெள்ளத்துடன் , கழிவுநீர் சேர்ந்து வீடுகளை சுற்றி இருப்பதால் நோய் தொற்று பரவும் அபாயம் உள்ளது.

வானம் இருட்டி மேகமூட்டத்துடன் காணப்படுவதால் பாம்பன் வீதி பாலத்தில் வாகனங்கள் ஊர்ந்து செல்கின்றன. கடந்த 5 நாள்களாக மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லவில்லை. தொடர்மழையால் ராமேஸ்வரம் உள்ளிட்ட கடலோர பகுதிகள் மற்றும் மாவட்டத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பு விமான நிலையத்தில் தவிக்கும் இந்தியத் தமிழர்களை மீட்க நடவடிக்கை

## தமிழ்நாடு அமைச்சர் ஆவடி நாசர் தகவல்



கொழும்பு விமான நிலையத்தில் தவிக்கும் இந்தியத் தமிழர்களை மீட்க நடவடிக்க. எடுக்கப்பட்டிருக்கின்றது.?கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்துடன் தொடர்பு கொண்டு, விமான நிலையத்தில் இருக்கும் தமிழர்கள் உள்பட இந்தியர்களுக்கு உதவ கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது என்று தமிழ்நாடு வெளிநாடு வாழ் அயலகத் துறை அமைச்சர் ஆவடி நாசர் தெரிவித்தார்.

இலங்கையில் பெய்த கனமழையால் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக இலங்கை தலைநகர் கொழும்பில் உள்ள விமான நிலையத்தில் இருந்து கடந்த 3 நாள்களாக விமானங்கள் சரிவர இயக்கப்படவில்லை.

இதற்கிடையே துபாய், குவைத் ஆகிய நாடுகளில் இருந்து இலங்கை வழியாக இந்தியாவுக்கு வரவிருந்த சுமார் 300 பேர் கடந்த 27 ஆம் திகதி இலங்கையின் மத்தளை விமான நிலையம் வந்துள்ளனர். புயல் காரணமாக அங்கு விமானங்கள் ரத்து செய்யப்பட்டமையால் ஒருநாள் முழுக்க அங்கு தவித்துள்ளனர்.

பின்னர் கொழும்பு விமான நிலையத்துக்கு வந்துள்ளனர். ஆனால் புயல் காரணமாக சென்னை உள்ளிட்ட நகரங்களுக்கு புறப்பட இருந்த விமானங்கள் ரத்து செய்யப்பட்டமையா 150 தமிழர்கள் உள்பட 300 இந்தியர்கள் கொழும்பு விமான நிலையத்தில் தவித்து வருகின்றனர். உணவு, குடிதண்ணீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் கிடைக்காமல் அவதியடைந்து வருகிறார்கள். இந்த நிலையில் இலங்கையில் தவித்து வரும் தமிழர்களை மீட்டு பாதுகாப்பாக அழைத்து வர தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. முதல்வர் மு.க. ஸ்டாலின் உத்தரவின்பேரில் கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்துடன் பொதுத் துறை செயலாளர் ஆலோசனை நடத்தினார்.

இதுதொடர்பாக தமிழ்நாடு வெளிநாடு வாழ் அயலகத் துறை அமைச்சர் ஆவடி நாசர் கூறியவை வருமாறு:–

“இலங்கையில் கனமழை, வெள்ளம் காரணமாக விமானங்கள் இயக்கப்படாமல் கொழும்பு விமான நிலையத்தில் தவிக்கும் தமிழர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த விவகாரம் முதல்வரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது. கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்துடன் தொடர்பு கொண்டு, விமான நிலையத்தில் இருக்கும் தமிழர்கள் உள்பட இந்தியர்களுக்கு உதவக் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. தமிழர்களை மீட்கவும், அவர்களுக்கு உடனடியாக உதவிகளை அளிக்கவும் இந்திய தூதரைக் கேட்டுக் கொண்டுள்ளோம். மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதால் செல்போன்கள் செயலிழந்து இந்தியர்களைத் தொடர்பு கொள்ள முடியாத நிலை உள்ளது.” – என்றார்.

# துருக்கி கடலில் திடீரென வெடித்து சிதறிய ரஷ்யாவின் இரண்டு எண்ணெய் கப்பல்கள்



துருக்கியின் பாஸ்பரஸ் ஜலசந்திக்கு அருகே கருங்கடலில் ரஷ்யாவின் இரண்டு எண்ணெய் கப்பல்கள் திடீரென்று வெடித்து நெருப்பு கோளமான சம்பவம் வெளியாகியுள்ளது.

துருக்கிய அதிகாரிகள் மற்றும் வட்டாரங்கள் வெளியிட்டுள்ள தகவலில், கப்பலில் இருந்தவர்களை மீட்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

எகிப்திலிருந்து ரஷ்யாவுக்குச் செல்லும் வழியில் கருங்கடலில் 274 மீற்றர் நீளமுள்ள கைரோஸ் என்ற எண்ணெய் கப்பல் வெடித்து தீப்பிடித்துள்ளது.

இதனையடுத்து இரண்டு விரைவு மீட்புப் படகுகள், ஒரு இழுவைப் படகு மற்றும் ஒரு அவசரகால மீட்புக் கப்பல் உடனடியாக சம்பவ இடத்திற்கு அனுப்பப்பட்டதாக துருக்கியின் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேற்படி கப்பலில் இருந்து 25 ஊழியர்கள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ரஷ்யாவின் நோவோரோசிஸ்க் துறைமுகத்திற்கு சென்று கொண்டிருந்தபோது, துருக்கிய கடற்கரையிலிருந்து 28 கடல் மைல் தொலைவில் கைரோஸ் கப்பல் திடீரென்று ஏற்பட்ட தாக்கம் காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாக துருக்கியின் கடல் சார் விவகார இயக்குநரகம் தெரிவித்துள்ளது.

இன்னொரு எண்ணெய் கப்பலான விராட், கருங்கடலில் சுமார் 35 கடல் மைல் தொலைவில் மோதியதாகக் கூறப்படுகிறது, மேலும் மீட்புப் படைகளும் ஒரு வணிகக் கப்பலும் சம்பவ இடத்திற்கு அனுப்பப்பட்டதாக துருக்கியின் கடல்சார் விவகார இயக்குநரகம் தெரிவித்துள்ளது.

என்ஜின் அறையில் கடும் புகை இருப்பது கண்டறியப்பட்டது, ஆனால் அதில் இருந்த 20 பணியாளர்கள் பாதுகாப்பான நிலையில் இருந்தனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது விபத்தில் சிக்கியுள்ள இரண்டு கப்பல்களும் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவால் தடைகள் விதிக்கப்பட்ட கப்பல் வரிசையை சேர்ந்தவையாகும்.

சமீபத்திய ஆண்டுகளில் கருங்கடலில் கப்பல்கள் கண்ணிவெடிகளைத் தாக்கும் சம்பவங்கள் நடந்துள்ளன, மேலும் சில கண்ணிவெடிகள் மிதந்து செல்வதும் கண்டறியப்பட்டுள்ளது.

சம்பவம் நடந்தபோது கைரோஸ் கப்பல் காம்பியக் கொடியுடன் பயணித்துக் கொண்டிருந்தது. கப்பல் ஒரு கண்ணிவெடியில் மோதி மூழ்கும் அபாயத்தில் உள்ளது என்றே தகவல் வெளியாகியுள்ளது. அதிர்ஷ்டவசமாக, சம்பவத்தின் போது கப்பலில் எண்ணெய் எதுவும் இல்லை என்றே கூறப்படுகிறது.

## பிச்சை எடுப்பது உள்ளிட்ட குற்றச்சாட்டுகள்;

# பாகிஸ்தானியர்களுக்கான விசாவை ரத்து செய்தது ஐக்கிய அரபு அமீரகம்




பிச்சை எடுப்பது உள்ளிட்ட சட்டவிரோத செயலில் ஈடுபவதாக கூறி பாகிஸ்தானியர்களுக்கான விசாவை ஐக்கிய அரபு அமீரகம் ரத்து செய்துள்ளது.

பாகிஸ்தான் கடந்த சில ஆண்டுகளாக மோசமான பொருளாதார சூழலை எதிர்கொண்டு வருகிறது.

இதன் காரணமாக, பலரும் வேலைக்காக உலகின் பல்வேறு நாடுகளுக்கு செல்ல தொடங்கியுள்ளனர்.

இதே போல், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் போன்ற அரபு நாடுகளுக்கும் ஏராளமான பாகிஸ்தானியர்கள் செல்ல தொடங்கியுள்ளனர்.

ஆண்டுக்கு 8 லட்சம் பாகிஸ்தானியர்கள் விசா கோரி வளைகுடா நாடுகளுக்கு விண்ணப்பம் செய்கின்றனர்.

இந்நிலையில், பாகிஸ்தானியர்களுக்கான விசாவை ஐக்கிய அரபு அமீரகம் அதிகாரப்பூர்வமற்ற வகையில் நிறுத்தியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

நீல மற்றும் ராஜதந்திர கடவுச்சீட்டு தவிர, வழக்கமான பாகிஸ்தான் கடவுச்சீட்டு வைத்திருப்பவர்களுக்கு விசா வழங்குவதை ஐக்கிய அரபு அமீரகம் நிறுத்தியுள்ளது.

வருகை விசாவில் வரும் பாகிஸ்தானியர்கள் பிச்சை எடுப்பது, போதைப்பொருள் கடத்தல் போன்ற பல்வேறு குற்ற சம்பவங்களில் ஈடுபட்டு வருவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு, உம்ரா மற்றும் ஹஜ் விசாக்களில் சவூதி அரேபியாவில் நுழையும் பாகிஸ்தானியர்களின் எண்ணிக்கை அதிர்ச்சியூட்டும் வகையில் அதிகரித்ததோடு, அவர்கள் மக்கா மற்றும் மதீனா போன்ற புனித நகரங்களில் பிச்சை எடுப்பதில் ஈடுபடுவதை சவூதி அரேபியா கடுமையாக எச்சரித்தது.

அதைத்தொடர்ந்து, 4,000 பாகிஸ்தானிய பிச்சைகாரர்களை சவூதி அரேபியா நாடு கடத்தியுள்ளது.

# அவசர காலத்தில் பெண்கள், சிறுவருக்கு இலவச உதவி இலக்கங்கள் அறிமுகம்



நாட்டில் தொடரும் அவசரகால சூழ்நிலைக்கு மத்தியில், துயரத்தில் இருக்கும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான விடயங்களை முறைப்பாடு செய்வதற்கு இரண்டு புதிய இலவச அழைப்புக்கான தொலைபேசி உடனடி இலக்கங்களை மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்கள் அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.

பெண்கள் தொடர்பான தகவல்களை முறைப்பாடளிக்க 1938 என்ற இலக்கமும், சிறுவர்கள் தொடர்பான விடயங்களை முறைப் பாடளிக்க 1929 என்ற இலக்கமும் பயன்படுத்தப்படலாம் என அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த இரண்டு சேவைகளும் இலவசமாக, 24 மணி நேரமும் செயல்படும் என்பதுடன், சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் ஆதரவு கிடைப்பதை உறுதி செய்கின்றன.

# இலங்கையின் பிரபல பாடகர் நவகம்புர கணேஷ் காலமானார்



இலங்கைத் தமிழ் இசைத்துறையில் மிகவும் பிரபலமான மற்றும் குறிப்பிடத் தக்க கானா பாடகராக அறியப்பட்ட நவ கம்புர கணேஷ் காலமானார்.

நீண்ட காலமாக உடல் நலக்குறைவி னால்பாதிக்கப்பட்டிருந்த அவர் இன்றைய தினம் காலமானார்.

இவர் தனது தனித்துவமான “கானா” பாடல்கள் மூலம் பரவலாக அறியப்பட்டது டன், இசை விழாக்கள் மற்றும் மேடைக ளில் பாடி பெரும் ரசிகர் கூட்டத்தைப் பெற்றிருந்தார்.

அத்துடன், இவர் பாடிய “மட்டகுளி யில கட்ட கவுனொட” மற்றும் “கொழும்பு நகரை சுற்றிவந்து பாருங்க” போன்ற பாடல்கள் இலங்கை ரசிகர்களிடையே மிகவும் பிரபலமானவை என்பது குறிப் பிடத்தக்கது.

# சிலாபத்திலிருந்து உலங்கு வானூர்தி மூலம் கொழும்பிற்கு அழைத்துவரப்பட்ட 2 சிசுக்கள்




மின் தடை காரணமாக சிலாபம் ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த 2 சிசுக்கள், இலங்கை விமானப்படையினரால் நேற்று மருத் துவர்களின் உதவியுடன் ஹெலிக் கொப்டர் மூலம் மீட்கப்பட்டு கொழும்பில் உள்ள சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் மருத் துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

2 சிசுக்களுடன் 10 வயது சிறுமி யும் சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவ மனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டனர் என விமானப்படை மேலும் கூறுகிறது.

இதனையடுத்து இலங்கை விமானப் படைத் தளத்தின் இலக்கம் 04 ஆவது படையணியைச் சேர்ந்த Bell-412 ரக ஹெலிக்கொப்டர் மூலம் அவர்கள் கட்டுநாயக்க முகாமுக்குக் கொண்டு வரப்பட்டனர்.

பின்னர் அங்கிருந்து நோயாளர் காவுவண்டி மூலம் சீமாட்டி ரிட்ஜ்வே சிறு வர் மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டனர் என விமானப்படை மேலும் கூறியுள்ளது.




# 12 மணித்தியாலத்துக்குள் பெய்யும் பலத்த மழை

எதிர்வரும் 12 மணித்தியாலத்துக்குள் நாட்டின் வடக்கு, வடமத்திய, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் பலத்த மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

இதன்படி, வடக்கு, வடமத்திய, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், சபரகமுவ மாகாணம் மற்றும் மேல் மாகாணத்தில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான குறிப்பிடத்தக்க மழை பெய்யும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

# நாடு முழுவதும் பரவலாக மின் தடைகள் ஏற்பட்டன

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக நாடு முழுவதும் பரவலாக மின்சாரத் தடைகள் ஏற்பட்டுள்ளன.

இதன்படி கிட்டத்தட்ட 200,000 வாடிக்கையாளர்கள் தற்போது மின்சாரம் இல்லாமல் இருக்கின்றனர் என இலங்கை மின்சார சபையின் பிரதி பொது முகாமையாளர் நோயல் பரியந்த தெரிவித்துள்ளார்.

இதற்கமைய மின் விநியோகத்தை மீட்டெடுக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், தொடர்ச்சியான மோசமான வானிலை இந்த செயற்பாட்டிற்கு சவாலாக உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் மத்திய மாகாணத்தில் அதிக எண்ணிக்கையிலான மின் தடைகள் பதிவாகியுள்ளன. இதன்படி மத்திய மாகாணத்தில் 20,000 இற்கும் மேற்பட்ட மின் தடைகள் பதிவாகியுள்ளன.

இந்தநிலையில் மின்சார சபை 9,000 பணியாளர்களைக் கொண்ட தொழில்நுட்பக் குழுவை பணியில் ஈடுபடுத்தியுள்ளது.

ஆனால், தடங்கல்களின் அளவு மற்றும் தற்போதைய நிலைமைகள் காரணமாக மின்சாரத்தை முழுமையாக மீட்டெடுக்க கணிசமான நேரம் எடுக்கும் என்றும் நோயல் பிரியந்த மேலும் கூறினார்.





# நாடு முழுவதும் 206 வீதிகள் தடை

## 10 பாலங்கள் சேதமடைந்தன

நாட்டில் நிலவும் மோசமான அனர்த்த நிலை காரணமாக, வீதிப் போக்கு வரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

தற்போது அநுராதபுரம் மற்றும் நுவரெலியா ஆகிய நகரங்களுக்கான தரை வழி அணுகல் முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், நாடு முழுவதும் வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் காரணமாக மொத்தம் 206 வீதிகள் தடைப்பட்டுள்ள நிலையில், 10 பாலங்கள் சேதமடைந்துள்ளன.

மேலும், தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் அமைந்துள்ள அத்துருகிரிய இடைமாறல் பகுதி வெள்ளத்தில் மூழ்கியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், பொதுமக்கள் அத்தியாவசியமற்றபயணங்களைத்தவிர்த்து, மிகவும் அவதானத்துடன் இருக்குமாறு கோரப்பட்டுள்ளது.

# நாட்டில் 11 மாவட்டங்களில் அதியுச்ச மண்சரிவு அபாயம்

## சிவப்பு எச்சரிக்கை விடுப்பு



நாட்டில் நீடித்து வரும் கடும் மழை வீழ்ச்சி காரணமாக, 11 மாவட்டங்களுக்கு அதிகபட்ச மண்சரிவு அபாய எச்சரிக்கையான மூன்றாம் நிலை (சிவப்பு) எச்சரிக்கையை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் விடுத்துள்ளது.

இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் பதுளை, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை, மொனராகலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகியன அடங்குகின்றன.

இந்த மாவட்டங்களில் உள்ள மலைப் பாங்கான மற்றும் அபாயம் நிறைந்த பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருப்பதுடன், அதிகாரிகள் வெளியேறுமாறு அறிவுறுத்தினால் தாமதமின்றிப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அதிக மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகளுக்கே இவ்வாறு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.





# ஏனைய பிரதேசங்களுடன் தரைத் தொடர்புகளை இழந்து பாதிப்புகளுடன் பரிதவிக்கிறது மன்னார்!

## நெருக்கடிகளை விவரிக்கின்றார் அரச அதிபர் கனகேஸ்வரன்

**(மன்னார் நிருபர்)**

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண காலநிலை காரணமாக அதிக எண்ணிக்கையான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மன்னார் மாவட்டத்திற்காண இரு முக்கிய பாதைகளான மன்னார் – மதவாச்சி பிரதான பாதை மற்றும் மன்னார் – யாழ்ப்பாணம் பிரதான பாதை ஆகியவை வெள்ள நீர் காரணமாக போக்கு வரத்துக்கு முழுமையாகத் துண்டிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக மன்னார் மாவட்டம் ஏனைய மாவட்டங்களுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டுள்ள மக்களை வெளியேற்ற முடியாத நிலையும் காணப்படுகின்றது.

– இவ்வாறு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது பெய்து வருகின்ற மழை மற்றும் வேறு மாவட்டங்களில் இருந்து குளங்களின் மேலதிக நீர் ஆகியவை பெருக்கெடுத்து மன்னார் மாவட்டத்தில் பல்வேறு கிராமங்களை தனித்துத் துண்டித்து விட்டுள்ளது.

இதன் காரணமாக கூராய் மற்றும் குஞ்சுக்குளம் போன்ற பகுதிகளில் பொது மக்கள் பலர் தனித்து விடப்பட்டுள்ள நிலையில் தங்களைக் காப்பாற்றுமாறு கோரி இருக்கின்றார்கள்.

வெள்ளத்தின் நீரோட்டம்திகமாக இருப்பதன் காரணமாக அவர்களைப் படகுகள் மூலம் மீட்டெடுக்கும் நடவடிக்கை மிகவும் கடினமானதாக காணப்படுகின்றது. இதனால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்க விமானப்படையின் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளது.

தற்போது நீடித்துள்ள மோசமான வானிலை காரணமாக விமானப்படையின் உதவியும் மேற்கொள்ளப்பட்ட மீட்பு நடவடிக்கைகளும் கை கூடவில்லை. இரண்டு தடவைகள் முயற்சி செய்த பின்னர் தற்போது வவுனியாவில் வானூர்தி தறித்து நிற்கின்றது.

இவ்வாறாக பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதில் முப்படையினர் மற்றும் பொலிஸாருடன் இணைந்து உரிய திணைக்களத்தினர் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 24 ஆயிரத்து 331 குடும்பங்களைச் சேர்ந்த 79 ஆயிரத்து 946 நபர்கள் அசாதாரண கால நிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர். இதனை விட 3 ஆயிரத்து 795 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 873 நபர்கள் 61 பாதுகாப்பு மையங்களிலே தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.அவர்களுக்கான சமைத்த உணவுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

எனவே மக்கள் தமது பாதுகாப்பை கருத்தில் கொண்டு பிரதேசச் செயலாளர்கள் மற்றும் கிராம அலுவலகர்களினால் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்களை பின் பற்றி செயல்படுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம். தற்போது ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்து விவரம் சேகரிக்கும் நடவடிக்கைகளும் அதிகாரிகளினால் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

நன்கொடையாளர்கள் மற்றும் அரச சார்பாற்ற அமைப்புக்களின் உதவியுடன் உலர் உணவுகளை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்ற ஆறாக மல்வத்து ஓயா காணப்படுகின்றது. அதில் தற்போது அபாய கட்டமாக 19 அடிக்கு நீர் பாய்ந்து கொண்டு இருக்கின்றது.

அதன் காரணமாக ஆற்றங்கரையுடன் காணப்படுகின்ற அனைத்துக் கிராமங்களும் தற்போது வெள்ளத்தில் மூழ்கி உள்ளன. அதனை விட பாலியாறு, பரங்கியாறு போன்றவையும் அதிக அளவு நீரை வெளியேற்றுவதினாலும் மன்னார் – யாழ்ப்பாணம் பிரதான வீதியூடான போக்குவரத்துக்கள் முழுமையாக துண்டிக்கப்பட்டுள்ளன.

மேலும் மன்னார் மாவட்டத்தில் உள்ள சுமார் 400 இற்கும் மேற்பட்ட குளங்கள் அனைத்தும் நிரம்பி நீர் பாய்ந்து கொண்டு இருக்கின்றது. மாகாண திணைக்களத்திற்குச் சொந்தமான சன்னார் குளம் உடைப்பெடுத்துள்ளதன் காரணமாக விவசாயிகளுக்கு பாரிய அளவில் பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. – என அவர் மேலும் தெரிவித்தார்.













# நீரில் மூழ்கியுள்ள தம்பலகாமம் வயல்கள் நீர் வெள்ளம் படிப்படியாக வழிந்தோடுகின்றது

(ஏ.எச்.ஹஸ்பர்)

சீரற்ற கால நிலை காரணமாக தம்பலகாமம் – கிண்ணியா முள்ளியடி பிரதான வீதியின் போக்குவரத்து தடைப்பட்ட நிலையில் வெள்ளநீரின் அளவு படிப்படியாக குறைந்து தற்போது நேற்று போக்குவரத்துச் செய்ய கூடிய நிலை காணப்படுகிறது. இதனை அண்மித்த வயல் நிலப் பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளமையுடன் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்தும் இடைத் தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டு அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் கண்காணிப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகிறது.

தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சுமார் 3,000 க்கும் மேற்பட்ட ஏக்கர் வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன. இதனால் தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட 34 குடும்பங்களை சேர்ந்த 97 பேர்கள் தம்பலகாமம் பிரதேச ஆதிகோனேஸ்வரா மகா வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான சமைத்த உணவுகள் பிரதேச செயலகம் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.



# முல்லைத்தீவிலும் வெள்ளம் பாய்கின்றது

முல்லைத்தீவு – பரந்தன் பிரதான வீதியில் கண்டாவளை தொடக்கம் புளியம் பொக்கணை சந்தி வரையான பகுதி நீரில் மூழ்கியுள்ளது.

குறிப்பாக ஒன்றரை அடி உயரத்திற்கு வெள்ள நீர் ஆபத்தாக பாய்வதால் மறு அறிவித்தல் வரை அப்பகுதியில் போக்குவரத்திற்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

மேலும், வற்றாப்பளை சந்திவரை வீதிகள் சாதாரணமாக உள்ள நிலையில் அங்கிருந்து முல்லைத்தீவு நகர் வரை நீரால் சூழப்பட்டுள்ளது. புளியம்பொக்குழ பாலம் சேதமடைந்தது.

இந்நிலையில் மின்சாரம், தொலைத்தொடர்பு இல்லாமை பெரும் நெருக்கடியை தருவதாகவும் போதிய தகவல்கள் திரட்டுவதில் தாமதம் மற்றும் கடினமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அங்கு 14 இடைத்தங்கல் முகாம்களில் 2600 பேர் வரை தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள்- 30.11.2025




இன்று நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். இன்று சஞ்சலமான மன நிலையில் இருப்பீர்கள். இன்று தகுந்த முடிவுகளை எடுக்க இயலாது.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பதை கடினமாகக் கருதுவீர்கள். திட்டமிட்டு பணிகளை ஒழுங்கமைத்து செயலாற்றுவது சிறந்தது.

உங்கள் உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க நீங்கள் அமைதியான சகஜமான அணுகுமுறை மேற்கொள்ளவும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். குடும்பத்திற்காக அதிக பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும்.

தாயின் உடல்நிலை குறித்த கவலை இருக்கும்.




இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். உங்கள் முடிவுகளில் கவனம் தேவை. நீங்கள் வீழ்ச்சியடையாமல் இருப்பதற்கு விவேகமாக நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளுடன் நல்லுறவு காணப்படாது. வேலை இழக்கும் வாய்ப்பு காணப்படுகின்றது.

உங்களிடம் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். நேர்மறையான அணுகுமுறை நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தும்.

உங்கள் அஜாக்கிரதை காரணமாக பண இழப்பு ஏற்படும். சேமிப்பதற்காக பணம் ஈட்டுவதை இன்று கடினமாக உணர்வீர்கள்.




இன்று உங்களிடம் ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படும். உங்கள் புத்திசாலித்தனத்தால் இன்று வெற்றி காண்பீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள்.

உங்கள் நேர்மை மற்றும் கடின உழைப்பு காரணமாக பணியிடச் சூழல் சுமூகமாக இருக்கும் உங்கள் செயல் திறன் திருப்திகரமாக இருக்கும். உங்கள் பணிகளை திறமையாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் அனுசரித்துப் போவதன் மூலம் நன்மை விளையும். நீங்கள் இருவரும் பரஸ்பரம் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.




இன்று உங்கள் செயல்களில் கவனம் தேவை. சிறப்பாக திட்டமிட்டால் பதட்டமின்றி செயல்படலாம். முக்கிய முடிவுகளை தள்ளிப் போடவும்.

பணியிடத்தில் சகபணியாளர்களுடனான உறவுமுறையில் சில குழப்பங்கள் காணப்படும். அதனை சமாளித்து பணியாற்ற இன்று பொறுமை அவசியம்.

இன்று சிறிய விஷயங்களைப் பெரிதாகக் கொள்வீர்கள். உங்கள் குடும்ப விஷயத்தில் உங்கள் துணையுடன் சில சிக்கல்களை சந்திக்க நேரும். மனம் திறந்து பேசி வேறுபாட்டை களைவதன் மூலம் உறவில் நல்லிணக்கமும் புரிந்துணர்வும் ஏற்படும். நிதிநிலை சிறப்பாக இருக்காது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள நீங்கள் பணத்தை கடனாக வாங்குவீர்கள்.அஜீரணக் கோளாறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. சரியான உணவு மற்றும் நேரத்திற்கு உணவு மேற்கொள்வது நல்ல பலனளிக்கும்.




உங்களின் திறமையான தகவல் பரிமாற்றம் மூலம் வெற்றிகரமான பலன் காண்பீர்கள். ஆன்மீக சொற்பொழிவு மற்றும் இறை மந்திரங்கள் ஜெபித்தல் ஆகியவற்றில் ஈடுபடுங்கள். இதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

உங்கள் பணியில் சிறந்த நல்ல பலன்கள் கிடைக்கும். பணியிடத்தில் உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் இருவரிடையே காணப்படும் நல்ல புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் வெளிப்படையாக மனம் திறந்து பேசுவீர்கள்.

நிதிநிலை திருப்திகரமாக இருக்கும். பணத்தை ஆன்மீக விஷயங்களுக்கு செலவு செய்யலாம்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்திருக்கும்.




இன்று உங்களிடம் வருத்தமான மன நிலை காணப்படும். உங்கள் முயற்சிகள் மூலம் வெற்றிகரமான பலன்கள் கிடைக்காது. இதனை சுமையாகக் கருதுவீர்கள். முறையாக திட்டமிட்டால் வெற்றி பெறலாம்.

நல்ல வாய்ப்பு வழங்கும் வேலை மாற்றத்தை நீங்கள் வரவேற்கலாம். புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிக்க நீங்கள் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் துணையை மகிழ்விக்க சம்பவங்களை தீவிரமான போக்கில் எடுத்துக் கொள்வதை தவிர்க்க வேண்டும்.

தேவையற்ற செலவுகள் கவலையை அளிக்கும்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்காது. தேவையற்ற கவலைகள் காரணமாக இன்று உங்கள் திறன் குறையும். என்றாலும் நம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி பெறலாம்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் அணுகுமுறையில் கவனம் தேவை.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் ஏற்படலாம். எனவே உங்கள் துணையுடன் பொறுமையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

தேவையற்ற செலவுகளின் சுமை காணப்படும். பணத்தை திட்டமிட்டு முறையாக கையாள்வதன் மூலம் இதனை தவிர்க்கலாம்.




இன்று பதற்றமும் வருத்தமும் காணப்படும். நீங்கள் உணர்ச்சிப் பூர்வமாகப் பேசுவீர்கள். இதனை தவிர்ப்பதன் மூலம் பாதகமான சூழ்நிலை ஏற்படாமல் இருக்கும். பிரார்த்தனை சிறந்த பலனைத் தரும்.

பணியிடத்தில் அதிகப் பணிகள் காணப்படும். அதனால் உங்கள் பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்களின் அகந்தைப் போக்கு காரணமாக உங்கள் துணையுடன் பிரச்சினை ஏற்படும். என்றாலும் மனம் திறந்த பேச்சின் மூலம் நன்மை விளையும்.இன்று அதிக பொறுப்புகள் காரணமாக பணப்பற்றாக்குறை காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள்- 30.11.2025




இன்று சிறந்த மனநிலை காணப்படும். உங்கள் பணிகளை எளிதில் முடிப்பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும்.

உங்கள் பணியில் வெற்றி பெறுவீர்கள். குறித்த நேரத்திற்கு முன்பே உங்கள் பணிகளை முடித்து விடுவீர்கள்.

உங்கள் அன்பான வார்த்தைகளால் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இதனால் உங்கள் உறவில் மகிழ்ச்சி ஏற்படும்.

உங்கள் பணியில் நேர்மையாக இருப்பீர்கள். உங்கள் கடின உழைப்பிற்கு ஊக்கத்தொகை வகையில் பணம் பெறுவீர்கள்.




உங்களின் ஆர்வத்தை மேம்படுத்தும் திட்டங்களை இன்று எடுக்கலாம். இசை கேட்பது மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபடுவது போன்றவை ஆறுதல் அளிக்கும். நம்பிக்கையான அணுகுமுறை சிறந்த பலனளிக்கும்.

இன்று அதிகப் பணிகள் காணப்படுவதால் பணிகளை சரியான குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. திட்டமிட்டு கவனமுடன் பணியாற்றினால் சிறப்பாக பணியாற்றலாம்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்படும். இந்த வேறுபாட்டை நீக்க நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். இன்று மகிழ்ச்சியாக இருக்க அவருடன் அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும்.

பணபுழக்கம் குறைவாக இருக்கும். வீண் விரயங்களை தவிர்க்க பணத்தை கவனமாக செலவு செய்ய வேண்டும்.

உங்களின் மன உளைச்சல் காரணமாக நீங்கள் கால் வலியால் அவதிப்படுவீர்கள்.




இன்று உற்சாகமாக இருப்பீர்கள். இன்று நண்பர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். புதிய மனிதர்களை சந்திப்பீர்கள். இன்று முக்கியமான முடிவுகள் எடுக்கலாம்.

நீங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.உங்களின் சீரிய அணுகுமுறை மூலம் கடினமான பணிகளைக் கூட எளிதாக செய்து முடிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் திருப்தியான மனநிலை காரணமாக நீங்கள் உங்கள் துணையுடன் சிறந்த நட்பான அணுகுமுறை கொள்ள நேரலாம்.

இன்று நிதிநிலை மிகவும் திருப்திகரமாக இருக்கும். அதிக பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆற்றல் மூலம் உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.




இன்றைய நாள் சாதகமான விளைவுகளையும் மகிழ்ச்சியான தருணங்களையும் அளிக்கும். நீங்கள் பொழுதுபோக்கு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மகிழ்ச்சியடைவீர்கள்.

உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படும். அவர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். பணியில் உங்கள் செயல்திறன் திருப்திகரமாக இருக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இது இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்பட வழி வகுக்கும்.

நிதிநிலை திருப்திகரமாக இருக்கும். பணத்தை உங்கள் தேவைக்கேற்ப பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.



# கண்டியில் 10 பேரின் சடலங்கள் மீட்பு

கண்டி – மாத்தளை வீதியில் உள்ள அலவத்துகொடையில் இடம்பெற்ற மண் சரிவுக்குள் சிக்குண்ட 10 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த மண்சரிவு நேற்று அதிகாலை 1.00 மணியளவில் ஏற்பட்டுள்ளது.

அங்கும்புர – அலவத்துகொடை வீதியில் ரம்புக் எல பகுதியில் ஏற்பட்ட இந்த அனர்த்தத்தினால் கிராமத்தின் பெரும்பகுதி பாதிக்கப்பட்டுள்ளது.

சுமார் 50 குடும்பங்களை சேர்ந்த ஒரு கிராமமே மண் சரிவுக்குள் அகப்பட்டு காணாமல் போயுள்ளதாகக் கருதப்படுகின்றது. 20 குழந்தைகள் உட்பட குறைந்தது 120 பேர் இங்கு காணாமல் போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நிலச்சரிவு ஏற்பட்ட பகுதியில் நிலத்தின் நிலைமை மிகவும் குழபமாகவும் ஆபத்தானதாகவும் இருப்பதால் மீட்புக் குழுக்கள் அந்தப் பகுதிக்கு செல்ல முடியவில்லை. மேலும் மண்சரிவு ஏற்படும் அபாயம் தொடர்வதால் அணுகுவதில் மிகுந்த சிரமம் இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.